வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 14.2.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியாவும்-அமெரிக்காவும், 2030-ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தை 2 மடங்காக உயர்த்த முடிவு செய்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா- மருத்துவ காப்பீட்டு திட்டத்தை, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார்.

சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், சிபிஎஸ்இ பொது தேர்வுகள், நாளை முதல், வரும் ஏப்ரல் 4-ஆம் தேதி வரை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணைப்படி நடைபெற உள்ளன.

*மோடி-அமெரிக்கா*

இந்தியாவும்-அமெரிக்காவும் தங்களுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை, 2030-ஆம் ஆண்டிற்குள் 2 மடங்காக உயர்த்த முடிவு

செய்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். வாஷிங்டன் டி.சி-யில், அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பை சந்தித்த அவர், பின்னர் அமெரிக்க அதிபருடன் இணைந்து நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் இதைத் தெரிவித்தார்.

இந்தியாவின் பாதுகாப்புத் தயார் நிலையில் அமெரிக்காவின் பங்கு முக்கியமானது என்றும், இருநாடுகளுக்கும் இடையே, தந்திரோபாயக் கூட்டாண்மை உறவுகள் தொடரும் என்றும் அவர் கூறினார் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவும்-அமெரிக்காவும் ஒன்றாகவே நின்று வருவதாகவும், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஒழிக்க கடும் நடவடிக்கை தேவை என்பதே இரு நாடுகளின் நிலைப்பாடு என்றும் பிரதமர் கூறினார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் உலகின் மிகப் பழமையான, மிகப் பெரிய, 2 ஜனநாயக நாடுகளான, இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே, சிறப்புப் பிணைப்புகள் இருப்பதாக கூறினார். இருநாடுகளுக்கும் இடையே, எரிசக்தி தறையில் முக்கிய உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம், இந்தியாவிற்கு எண்ணெய்-எரிவாயு வழங்கும் முன்னணி நாடாக அமெரிக்கா திகழும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கும்-அமெரிக்காவிற்கும் இடையே, பெரிய அளவில் ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான 10 ஆண்டு வரைவுத் திட்ட ஒப்பந்தமும் கையெழுத்தாக உள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப்-பிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இரு தலைவர்களும், பரஸ்பர நன்மைக்கான, பல்முனை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்தும், முதல் கட்ட பேச்சு வார்த்தைகளை இவ்வாண்டு தொடக்க உள்ளதாக, வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு இன்று மீண்டும் தாயகத்திற்கு புறப்பட்டுள்ளார்.

*எரிசக்தி-வாரம்*

புதுடெல்லியில் கடந்த 11-ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்க வைத்த, இந்தியா எரிசக்தி வார விழா,இன்றுடன் முடிவிற்கு வருகிறது. கண்காட்சிப் பரப்பு, அமர்வுகளின் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில், உலகின் மிகப் பெரிய எரிசக்தி நிகழ்வாக அமைந்த இவ்விழாவில், 120 நாடுகளில் இருந்து சுமார் 7 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டன. பன்னாட்டு எரிசக்தி நிறுவனங்களின் அரங்குகளுக்கு

அப்பாற்பட்டு, மத்திய மின்துறை அமைச்சகம், புதுப்பிக்க வல்ல எரிசக்தி அமைச்சகம், மற்றும், சுரங்கத் துறை அமைச்சகத்தின் அரங்குகளும் விழாவில் இடம் பெற்றன. இந்தியாவில், பிரதமரின் உஜ்வாலா திட்டத்திற்கு கிடைத்துள்ள வெற்றியை, உலக நாடுகளும் பின்பற்றத் தகுந்த முன் மாதிரியாக எடுத்துக் காட்ட, எரிசக்தி வார விழாவில், முக்கியத் துவம் அளிக்கப்பட்டது.

கும்பமேளா

பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவில், நாட்டின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழர்களும் இதில் அடங்குவர்.

மலேசியாவில் இருந்து மகா கும்பமேளாவிற்கு வந்துள்ள பக்தர்கள் திவேஷ் நாகராஜா, யோகி ராஜன் ஆகியோரை, அங்குள்ள எமது செய்தியாளர் சந்தித்த போது, கும்பமேளாவின் ஏற்பாடுகள் குறித்து மகிழ்ச்சி வெளியிட்டனர். இவர்கள் மேலும் கூறுகையில் …………..

(வாய்ஸ்)

*கும்பமேளா*

ஆந்திர மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில் இருந்து, மகா கும்பமேளாவிற்கு வந்துள்ள ஆர் கே ராமசந்திரன் எமது செய்தியாளரிடம் பேசுகையில்……………..

(வாய்ஸ்)

*கிரிமினல் சட்டம்*

3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்க நிலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில் மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீசுடன் மறு ஆய்வு கூட்டம் நடத்தினார். மகாராஷ்டிர காவல் துறை தலைவர் மற்றும் மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். முதலமைச்சர் திரு பட்நவீஸ் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மகாராஷ்டிர மாநிலத்தில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் விதிமுறைகள் குறித்து காவல்துறையில் 90 சதவிகிதம் பேருக்கு, ஏற்கனவே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*வயவந்தனா*

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்குவதற்கான பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் வயவந்தனா திட்டத்தை புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார். இந்திராகாந்தி

மருத்துவக் கல்லூரியின் கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பேசுகையில் மூட்டுவலி போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்படும் முதியவர்கள் பலர், சிகிச்சைக்கு பணம் செலவிட முடியாத நிலையில் இருப்பதையும், செலவு செய்தால் கடன் படும் சூழல் ஏற்படுவதையும் தவிர்க்க வயவந்தனா திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றார். ஜிப்மர் உட்பட பல்வேறு மருத்துவக் கல்லூரிகள் அடங்கிய புதுச்சேரியில் சிறப்பான மருத்துவ வசதிகள் மக்களுக்கு கிடைப்பதாகவும், நாட்டின் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக புதுச்சேரி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில்............ (வாய்ஸ்)

வயவந்தனா திட்டத்தின் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில் சிவப்பு குடும்ப அட்டை- மஞ்சள் குடும்ப அட்டை என்ற பாகுபாடு இல்லாமல் 70 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் மருத்துவ வசதி வழங்குவதே இத்திட்டத்தின் சிறப்பாகும் என்றார். சிகிச்சைக்கு

பணம் இல்லாத முதியவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இத்திட்டம் அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்...............

(வாய்ஸ்)

*பிரஞ்ச் விழா*

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், இன்று மாலை தொடக்கி வைக்கிறார். கடற்கரை சாலை காந்தி திடலில் நடைபெறும் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், புதுச்சேரிக்கான பிரஞ்ச் தூதரக ஜென்ரல் திரு எத்தியன் ரோலண்ட்-பிகுய் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள். இன்று முதல், வரும் 16-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தோ-பிரஞ்ச் திருவிழாவில், இருநாட்டு கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், பிரம்மாண்டமான பொம்மலாட்ட பொம்மைகளின் வீதி உலா உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இடம் பெறுகின்றன.

*சிபிஎஸ்இ*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பகுதிகளிலும், சிபிஎஸ்இ 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொது தேர்வுகள்,

நாளை முதல், வரும் ஏப்ரல் 4-ஆம் தேதி வரை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணைப்படி நடைபெற உள்ளன. இதற்கென புதுச்சேரியில் 21 தேர்வு மையங்களும், காரைக்காலில் 10, மாகேயில் 3, மற்றும் ஏனாமில் 2 தேர்வு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாத் தேர்வு மையங்களிலும், பாதுகாப்பு மற்றும் தடையற்ற மின்விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் தேர்வு எழுத வரும்போது, அலைபேசி உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்களை எடுத்து வரக் கூடாது என்றும், தேர்வுகூட அனுமதி சீட்டு இல்லாதவர்கள், தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் பள்ளிக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டு புதுச்சேரி பகுதியில், 86 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 98 மாணவ மாணவியர், சிபிஎஸ்இ 10-ஆம் வகுப்பு தேர்வும், 44 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த, 4 ஆயிரத்து 129 பேர், 12-ஆம் வகுப்பு தேர்வும், எழுத உள்ளனர். காரைக்கால் பகுதியில் இந்த எண்ணிக்கை முறையே ஆயிரத்து 181, மற்றும், ஆயிரத்து 203ஆக உள்ளது.

தேர்வு-வாழ்த்து

புதுச்சேரி மாநிலத்தில், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொது தேர்வு எழுத உள்ள மாணவ-மாணவிகளுக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். போட்டிகளையும், சவால்களையும் திறம்பட்ட

முறையில் எதிர்கொண்டால் தான் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும் என்றும் மாணவர்கள் தங்கள் திறமைக்கு தாங்களே சவால் விடுத்திக் கொள்வதே, சிறந்த போட்டியாகும் என்றும் அவர் கூறி உள்ளார். மாணவர்கள் எவ்வித மன அழுத்தங்களுக்கும் இடம் கொடாமல், துணிவோடும், தன்னம்பிக்கையோடும், மகிழ்ச்சியான மன நிலையில் தேர்வுகளை அணுகவேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

*தையல் இயந்திரம்*

புதுச்சேரியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம், 2023-24-ஆம் ஆண்டில் தையல் பயிற்சி முடித்த 33 பெண்களுக்கு, சான்றிதழ் மற்றும் இலவச தையல் இயந்திரங்களை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், ஆதிதிராவிடர் மற்றும் நலத்துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*மதகுப் பணி*

மணவெளி தொகுதிக்கு உட்பட்ட டி.என் பாளையம் கிராமத்தில் அபிஷேகப் பாக்கம் ஏரிக்கு செல்லும் ஆற்று வாய்க்காலில், 12 கண் மதகை, 30.35 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கும் பணிகளை, தொகுதி

சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவைத் தலைவருமான திரு ஆர் செல்வம் இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப் பணித் துறை நீர்ப் பாசனக் கோட்டத்தின் உதவிப் பொறியாளர் திரு செல்வராசு உள்ளிட்ட அதிகாரிகளும், உள்ளூர் பிரமுகர்களும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவும்-அமெரிக்காவும், 2030-ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தை 2 மடங்காக உயர்த்த முடிவு செய்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா- மருத்துவ காப்பீட்டு திட்டத்தை, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார்.

சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், சிபிஎஸ்இ பொது தேர்வுகள், நாளை முதல், வரும் ஏப்ரல் 4-ஆம் தேதி வரை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணைப்படி நடைபெற உள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/14.2.2025/Script.

-------------------------------------------------